தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1978 மார்ச் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

ரெவின்யூ இலாகா சீரமைப்பு.

* 341 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரெவின்யூ இலாகாவை சீரமைத்து புத்துயிரூட்டும் பொருட்டு உயர் அதிகார ரெவின்யூ நிர்வாக சீர்திருத்த கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு இலாகாக்களில் மிக அத்தியாவசியமான இலாகா ரெவின்யூ இலாகாவாக இருக்கிறது. இது மிகவும் தாமதமாகச் செயல்படுவதாக நீண்ட காலமாக ஒரு குறை இருக்கிறது. எனவே இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை செயல்படுத்தி விரைவிலே இந்த இலாகாவை துரிதமாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1955-ஆம் ஆண்டில் எம். வி. சுப்பிரமணியம் ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில் மாவட்ட வருவாய்த் துறை நிருவாக சீர் திருத்தக் குழு அமைக்கப்பட்டு, அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது இதுபோன்ற குழு ஒன்று அமைத்து மாவட்ட வருவாய்த் துறை நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ராமச்சந்தர் தெரிவித்துள்ள கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து நிதித் துறையைக் கலந்து ஆலோசித்து குழு ஒன்று அமைக்கப்படுவது பற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு டெசிஷன் எடுப்பது சமபந்தமாக பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். உங்களுக்கு சப்மிட் செய்யப்பட்ட ரிப்போர்ட்டில்—(குறுக்கிடு) ரெவின்யூ போர்டை அபாலிஷ் பண்ணுவதைப் பற்றி ஒரு கோரிக்கை இருக்கிறது. அப்படி அபாலிஷ் பண்ணுவதைப் பற்றி இந்த அரசின் நோக்கம என்ன ? இல்லை என்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து நடைபெற்ற தொடர்கூட்டங்களில் பேசுகிற ஒவ்வொரு பேச்சாளரும், சட்ட மன்ற உறுப்பினர்களும் இந்த ரெவின்யூ போர்டை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்ற தங்களுடைய கருத்துக்களை பலமாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இது குறித்து அரசு ஆராயும் என்று நான் இந்த மன்றத்தில் தெரிவித்து இருக்கிறேன் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகா சீரமைப்பு நடைபெறுகின்ற காலத்தில், ஜமாபந்தி முறையினால் பயன் எதும் இல்லை என்பதைக் கருதி அதை நிறுத்தக்கூடாதா ? அடுத்து கிராமத்தில் செட்டில்மெண்டு நடந்து 35 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கிராம ரெக்கார்டுகள் சரியாக இல்லை. அதையும் சரிவர வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன அதே உறுப்பினர்கள் இதையும் தெரிவித்தார்கள் என்பதை நான் உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த ரெவின்யூ நிர்வாக சீர்திருத்தக் குழு 1954-ல் ஒன்றும், அதற்குப் பின்னாலே மற்றொன்றும் போடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தகைய குழுக்கள் என்ன பரிந்துரைகளை வழங்கியிருக்கின்றன என்பதனை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, திரு. ராமச்சந்தர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அவர் என்ன கருத்து தெரிவித்தார் என்பதற்கு ஒரு தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்து நிதித் துறையைக் கலந்து ஆலோசித்து குழு அமைப்பது பற்றி முடிவு எடுக்கப்படும.

1978 மார்ச் 2]

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை பற்றி புலனாய்வு செய்யும்போது, என்னென்ன கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு கருதுகிறது. குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்ச்சித் தலைவர், தாசில்தார் ஆகிய 3 அதிகார நிலைகள் வேண்டாம் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறதே, அதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதுபற்றியும் ஆலோசிக்கப்படும்.

Sales tax on prawns etc.

*342 Q—Thiru K. ABDUL LATHEEF, Thiru S. J. SADIQ PASHA Will the —Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any representation has been received from the Sea Food Agents Association, Madras for exemption from the operation of the General Sales Tax Act for prawns, frogs etc, during August—September 1977 by the Government; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இறால் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, முதலில் அளித்த ' ஆம் ' என்ற பதிலுக்கொப்ப, உடனடியாக அரசு பரிசீலித்து, அதற்கு விற்பனை வரியில் இருந்து ரத்து செய்து உடனடியாக ஆணையிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் சாதிக் பாட்சா அவர்களின் சுவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருக்கு இருக்கும் இறால் பஞ்சம் எனக்குப் புரிகிறது. மீன் விற்பனைக்கு வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் கடைசிக் கொள்முதல் முனையில், இறால் மீன்கள், கடல் நண்டுகள், நண்டுகள், தவளைகள், தவளைக்கால்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 137-வது இனத்தின் கீழ் 3—3—1975-ஆம் நாளிலிருந்து 5 சதவீத வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். இவற்றிற்கு ஒருமுனை வரி